[2002 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குப் பதில் வேண்டாம். (சிரிப்பு)

வினா எண் 17, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

17—

அங்காடி

***1440—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், ராஜா கொத்தமங்கலத்தில் பொது விநியோக அங்காடி அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், ராஜா கொத்தமங்கலத்தில், அங்கு சுற்றுப்புறத்திலே இருக்கக்கூடிய பகுதி மக்களுடைய தேவையைக் கருதித்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பரிசீலனையை விரைவாக முடித்து, உடனடியாகத் திறப்பதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

2002 மார்ச் 13]

18—

வெங்காய இருப்புக் கிடங்கு

***9724—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோடு வெங்காய இருப்புக் கிடங்கு பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைய சூழ்நிலையில் மாற்றி அமைத்துத் தர சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கிடங்கு பாழடைந்த நிலையிலே இருக்கிறது. அதை எப்படியாவது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்து, அதை அரசு அலுவலகமாகவோ - பெரிய கட்டடம், 20 இலட்சம் ரூபாய் பெறுமான அந்தக் கட்டடம் பாழாகியிருக்கிறது - அல்லது விவசாயிகளுக்குப் பயன்படுகிற விதத்தில் ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடோ செய்துகொடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டில்தான் இது கட்டி முடிக்கப்பட்டது. வெங்காய ஏற்றுமதிக்காக திண்டுக்கல் சுற்றுவட்டாரத்தில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து இந்தக் கிடங்கில் வைத்து

ஏற்றுமதி செய்வதற்கு வசதியாகத்தான் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் விவசாயிகளிடத்திலே அதற்கு ஆதரவு இல்லாததாலும், அதைச் சரியாகப் பயன்படுத்த விவசாயிகள் யாரும் முன்வராத காரணத்தாலும், இவை நீண்ட நாட்களாகப் பயனற்று இருக்கின்றன. இவற்றைத் தனியார் மற்றும் இதர அரசு நிறுவனங்கள் பயன்படுத்த முன்வந்தால் அவர்களுக்கு மாற்றித்தர, அவர்களுக்கு வாடகைக்குவிட அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 19, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

19—

பழப் பண்ணைகள்

***1565—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் பழப் பண்ணைகள் அமைய அரசு தனியார்களை ஊக்குவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வகையில்?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் பழப் பண்ணைகள் அமைக்க அரசு தனியார்களை ஊக்குவிக்கும்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பழங்கள் பயிரிட தனியாரை அரசு ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது குறித்து இந்த மன்றத்திலே